## மார்ச் - 1

**"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து யேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." - பிலி 4 : 7**

இங்கே குறிக்கப்பட்டிருப்பது நம்முடைய சொந்த சமாதானம் அல்ல, அது தேவ சமாதானம். அதாவது தேவனுடைய வல்லமையையும், நன்மையையும் தமது பிள்ளைகளாக நம்மை தமது வலது கையினால் பிடித்திருக்க அவருக்கிருக்கிற இஷ்டத்தையும் தெளிவாக அறிந்து கொள்ளுவதிலிருந்து நமக்குக் கிடைக்கிற சமாதானம். இதன் கருத்து என்னவென்றால், ஒவ்வொரு விரோதமான அல்லது வியாகுலப்படுத்துகிற எண்ணத்தையோ அல்லது பயத்தையோ போருக்கு அழைக்கிற ஒரு காவலாளியைப்போல, இந்த சமாதானம் தொடர்ந்து காவல் புரிகிறது. இருதயத்தில் கர்த்தரோடு சமாதானத்தையும், ஐக்கியத்தையும், அந்நியோன்னியத்தையும், அவன் பெற்றிருக்கத்தக்கதாக, அது கிறிஸ்தவனின் மனதைப் பேணி வைத்திருக்கிறது. அது அவனுக்குப் போதித்து, தெய்வீக வல்லமை, ஞானம், அன்பு சம்பந்தமாக அவனுக்கு நிச்சயத்தையும் கொடுத்து, பரீட்சித்து நியாயங்கண்டு கொள்ளும் திறமைகள் கொண்ட அவனுடைய மனதையும் கூடக் காவல் புரிகிறது. **– Z ’ 03, 8 (R 3128)**

தேவனுக்கும், தேவனுடைய ஒழுங்குகளுக்கும் இணக்கமாக இருக்கிறோம் என்கிற உணர்வின் பலனாகக் கிடைக்கிற இருதயத்தின், மனதின் ஓய்வே, தேவ சமாதானம். அது பராமரிக்கப்பட்டு ஜென்ம சுபாவமான மனுஷனுக்கு ஏற்படும் அனுகூலமற்ற நிலைமைகளின் மத்தியில் அது இருதயத்தில் ஆளும்போது, அது எல்லா மானிட புத்தியையும் மிஞ்சம் செய்து, கிறிஸ்துவின் ஊழியத்தின் மூலமாக, இருதயத்தையும், மனதையும் தீமையினின்றும், நன்மையின் மத்தியிலும் நம்மைக் காக்கிறது. **-P ’34, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோவா 14:1,27; 16:33; ரோம 5:1; 8:6; கொலோ 1:20; 3:15; யோபு 34:29; சங் 4:8; 25:12,13; 29:11; 85:8; 119:165; 125:1,5; நீதி 3:17,24; ஏசா 26:3;28:12; 32:2,17,18; 53:5; 54:13; 57:1,2,19; எரே 33:6; லூக் 1:79; 2:14; அப் 10:36.

**கோபுர வாசிப்பு : Z ’11, 397 (R 4904).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் எனக்கு இந்த சமாதானம் இருந்ததா? அதில் உதவியாக இருந்ததும் இடையூறாக இருந்ததும் எவை? நான் அதை எவ்வாறு உபயோகித்தேன்? அதன் விளைவு என்ன?